பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 23 செவ்வாய்க்கிழமை (07-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 222

# விமானத்தை இழந்ததால் படையினருக்கு பின்னடைவு!

ஸ்ரீலங்கா விமானப்படை

## துணைத் தளபதியின் மகனும் பலியான 19பேரில் ஒருவர்

கடந்த ஞாயிறு மாலை இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தில் பயணம் செய்து, உயிரிழந்த 19 பேரில் ஸ்ரீலங்கா விமானப் படைத் துணைத்தளபதி லைவ்ஸ் மார்ஷல் வால்டர் பெர்னான்டோவின் மகனும் ஒருவர் என்று கூறப்படுகிறது.

இராணுவத் தரப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்ஸி செய்திகள் இத்தகவலை வெளியிட்டன.

உயிரிழந்த 19 பேரில் அறுவர் விமானப் படை அதிகாரிகள் என்றும் —

பதின்மூன்று பேர் விமானப் படை சிப்பாய்கள் என்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## விமானச் சிதைவுகளை மக்கள் பார்வையிட்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சிதைவுகளும் விமான ஓட்டியின் சிதைவுற்ற சடலமும் நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன.

சுன்னாகம், கோண்டாவில் யாழ். நகரப்பகுதி, கோப்பாய் ஆகிய இடங்களிலும் விமானச் சிதைவுகள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் வரிசையாகக் கூடி நின்று பார்வையிட்டனர்.

(உ-5-162-72-89-152)

## விமானம் சிதறியது குறித்து உயர்மட்ட விசாரணை

கொழும்பு, ஜூலை 7

சீனச் சகடை விமானம் வானத்தில் சிதறியது குறித்து ஸ்ரீலங்கா அரசு உயர்மட்ட விசாரணை ஒன்றை நடத்த உத்தரவிட்டிருக்கிறது.

இதற்காகவே பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க தலைமையில் உயரதிகாரிகள் குழு ஒன்று நேற்றுக் காலை பலாலி விமானத்தளத்துக்கு சென்றதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

கூட்டுப்படை தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா மற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் இந்த விசாரணைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## விமானத்தை வீழ்த்தியது விடுதலைப் புலிகளே!

### அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஜூலை 7

தற்போது கிடைத்திருக்கும் ஆதாரங்களின்படி சீனச் சகடை விமானத்தை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றனர் எனக் கூறுவதை எங்களால் நிராகரிக்க முடியாது.

— இவ்வாறு விமானப் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்திருப்பதாக சுயாதீன செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

★ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியிலேயே போர் விமானம் சிதறியது.

★ சுமார் 2 ஆயிரம் மீற்றர் உயரத்தில் பறக்கும் விமானங்களைத் தாக்கக்கூடிய — 50 மி. மீ. குண்டுகள் பொருத்தப்படுகின்ற — பீரங்கிகளை இப் பகுதியில் விடுதலைப் புலிகள் வைத்திருந்தனர்.

★ ஆயிரத்து 800 மீற்றர் உயரத்தில் பறந்து கொண்டிருந்த போதே இந்த விமானம் வெடித்துச் சிதறியது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விமானப் போக்குவரத்து பாதையில் மாற்றம்?

தாளையடி, ஜூலை 7

பலாலியிலிருந்து போர் நடக்கும் புல்லாவெளி, வாடியடிப் பகுதிகளுக்குச் செல்லும் விமானங்கள் நிலப்பகுதிக்கு மேலால் செல்லும் தமது வழக்கமான பாதையை மாற்றி, வடமராட்சி கிழக்கு கடற்பரப்புக்கு மேலால் பறந்து செல்கின்றன.

நேற்று முன்தினம் "வை - 8" விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதை அடுத்தே இந்தப் பாதை மாற்றம் என்று வடமராட்சி கிழக்குப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த சில தினங்களாக பச்சிலைப்பள்ளிப் பகுதியிலும், மற்றும் போர் முனைகளை அடுத்துள்ள கிராமங்களிலும் இரவு நேரத்தில் இடம்பெற்று வந்த விமானக் குண்டுவீச்சு நடவடிக்கைகள், ஞாயிறு மாலை 'வை - 8' விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதை அடுத்து அன்றிரவு இடம் பெறவில்லை. நேற்றிரவு அப்பகுதியில் குண்டுவீச்சு இடம்பெற்றதா என்பதை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை அறியமுடியவில்லை.

இதேவேளை —

குடாநாட்டிற்கு மேலாகச் செல்லும் விமானங்கள் நேற்று வானில் மிக உயரத்தில் பறந்து செல்வதை அவதானிக்க முடிந்தது.

(உ-144-5)

## பாதுகாப்பு உயரதிகாரிகள் பலாலிக்கு விரைந்தனர்

யாழ்ப்பாணம், ஜூலை 7

ஸ்ரீலங்கா விமானப்படையின் சீனச்சகடை விமானம் ஒன்றை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தியிருப்பது படையினருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீலங்காப் பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரிகள், நேற்றுக் கொழும்பிலிருந்து பலாலிக்கு விரைந்தனர்.

போர் விமானம் வீழ்த்தப்பட்டது இராணுவத்துக்கு பின்னடைவு என்பது நிச்சயம் என அடையாளம் கூறவிரும்பாத இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு கஷ்டமான நிலையை ஏற்படுத்தியிருப்பதாக மற்றொரு செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது.

விமானம் வீழ்த்தப்பட்ட செய்தி வெளியான பின்னர், நேற்று அதிகாலை விமானப் படைத் தளபதி ஏயர் மார்ஷல் டெரன்ஸ் குணவர்த்தனா பலாலி விமானப்படை முகாமுக்கு விரைந்து சென்றார்.

அவரைத் தொடர்ந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு முகாம்களுக்கு விநியோகம் விமானத்தை இழந்ததால் பாதிப்பு

கொலோன், ஜூலை 7

சீனச் சகடை விமானத்தை ஸ்ரீலங்காப் படைகள் இழந்திருப்பதால் அவர்களின் இராணுவ விநியோக நடவடிக்கைகள் சரி அரைவாசியாக—ஐம்பது சத வீதம்—பாதிக்கப்பட்டிருக்கிறது.

ஜேர்மன் வானொலியின் கொழும்புச் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்களுக்கு ஆயுதங்கள், வெடிப் பொருள்கள், எரிபொருள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்குவது, மற்றும் துருப்புகளைக் கொண்டு செல்வது, அவசர உணவு விநியோகம் ஆகியவற்றுக்கு இரண்டே இரண்டு 'வை - 8' ரக விமானங்களே இருந்தன. அவற்றில் ஒன்று இழக்கப்பட்டு விட்டது. அதனைச் செலுத்தும் விமானிகளும் உயிரிழந்துவிட்டனர்.

புலிகளை எதிர்த்துப் போரிட படையினரிடம் ஏற்கனவே போதிய விமானங்கள் இல்லை.

தற்போது பெரும் பற்றாக்குறையில் இருக்கும் தேசிய வருமானம் புதிய "வை - 8" விமானம் ஒன்றை கொள்வனவு செய்ய இடம் கொடாது.

மேலும் தற்போதைய சூழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### இப்படி ஒரு திட்டம்!

## விமானச் சிதைவுகளை மீட்க படையினர் ஊடுருவுவராம்!

சீனச் சகடை விமானம் நொருங்கி விழுந்த இடத்துக்கு திடீர் ஊடுருவல் ஒன்றை நடத்தி இறந்த தமது சகாக்களை மீட்க விமானப் படையினர் திட்டமிடுவதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

— இவ்வாறு ஜேர்மன் வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

ஆனையிறவு இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்களிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் விமானம் வீழ்ந்துள்ளது.

தரை வழி ஊடுருவல் சாத்தியமாகா விட்டால் விமானப் படையினர் பாதுகாப்பான உயரத்தில் பறந்து கொண்டு படம் எடுப்பதுடன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## விமானம் வெடித்துச் சிதற பெரும் தீப்பிழம்பு எழுந்தது!

### நேரில் கண்ட கிராமவாசிகள் தகவல்

— தென்மராட்சி, தாளையடி செய்தியாளர்கள் —

"அடுத்தடுத்து குண்டுகளை "வை-8" ரக விமானம் வீசிக் கொண்டிருந்தது. திடீரென வானத்தில் பெரும் சத்தத்தைத் தொடர்ந்து புகை மண்டலம் தெரிந்தது"

நேற்று முன்தினம் மாலையில் ஸ்ரீலங்கா விமானப்படையின் சிறிய சீனச்சகடை விமானம் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட போது, விமானம் வெடித்துச் சிதறியதை நேரில் கண்ட மருதங்கேணி, செம்பியன்பற்று கிராமவாசிகள் இவ்வாறு உதயன் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

மாலை 4. 35 மணிக்கு தாக்குதலை ஆரம்பித்த இந்த விமானம், ஐந்து குண்டுகளை வீசிய பின்னர் ஆறாவது குண்டை வீசுவதற்கு வட்டமிட்டபோதே தாக்குதலுக்கு உள்ளாகி திடீரென வெடித்துச் சிதறியது: அப்போது பெரும் சத்தமும் தீப்பிழம்பும் தோன்றி, புகைமண்டலம் மேலே கிளம்பியது. தொடர்ந்து பல கறுப்பு நிறத் துண்டங்கள் நிலத்தை நோக்கி விழுந்தன.

வானத்தில் தீப்பிடித்த நிலையில் விமானத்தின் பல சிதைவுகள் இயக்கச்சி— கோவில் வயல், மாவிலங்கம் தோட்டப் பகுதிகளில் வீழ்ந்தன.

— இவ்வாறு நேரில் கண்ட கிராமவாசிகள் தெரிவித்தனர்.

(உ-117-144)

## குமணவில் தபால் பொதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நேற்றுப் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்த குமண [illegible] 549 [illegible] பொதிகள் [illegible] டுள்ளன.

[இ-5]

## புல்லாவெளிப் பகுதியில் தொடர்ந்து சண்டை!

யாழ்ப்பாணம், ஜூலை 7

வெற்றிலைக்கேணி - புல்லாவெளிப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு எட்டாவது நாளான நேற்று தொடர்ந்து சண்டை இடம்பெற்றது.

படையினர் தொடர்ந்து முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர் என்றும்—

அவர்களைத் தடுத்து விடுதலைப் புலிகள் கடுமையாக மோதி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

செம்பியன்பற்றுக் கடல் பகுதியிலிருந்து நேற்று அதிகாலை மூன்று மணி முதல் பீரங்கித் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. கடற்படைக் கப்பல்களில் இருந்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களினால் செம்பியன்பற்றில் சில கட்டடங்கள் சேதமடைந்தன.

இதேசமயம்—

நேற்றும் போர் முனைப் பகுதியில் பொம்மர் தாக்குதல்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகன் தேவை

29 வயது, இந்து, ஆற்ற மற்ற பூரம் நட்சத்திர, 1ஆம் பாதம், இலக்கணத்தில் கேது உள்ள பட்டதாரி ஆசிரியைக்கு 36 வயதிற்குள் அரச, தனியார் துறைகளில் மணமகன் தேவை. தொடர்பு; இல. 851, மே/பா, உதயன்.
[5135]

### இலவச திருமண சேவை

29 வயது, உத்தராடம், ஜேர்மனியில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. பெண்ணை அழைக்க சகல ஏற்பாடுகளும் செய்யலாம். ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[5130]

27 வயது, ரோகிணி, செவ்வாய் - 1, U.K இல் தொழில் புரிபவருக்கு ஏற்ற மணப்பெண் U.K இல் விரும்பத்தக்கது. சகல தரங்களிலும் மணமக்கள் உண்டு. சந்திப்பு ஞாயிறு காலையில். து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
[5129]

### பரீட்சை A/L - 92

A/L 92 ஆண்டு விஞ்ஞான மாணவர்களுக்கு முன் மாதிரிப் பரீட்சை: விண்ணப்ப முடிவு திகதி 09 - 07 - 92. மேலும் விவரங்களுக்கு 'A' Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[சி-2749]

### சங்கீதம்

சங்கீதம் பயிலும் அனைவரும் அவசியம் வைத்திருக்க வேண்டிய புத்தகம். சங்கீதம் வினா-விடை, ஆக்கம்: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா, [சங்கீத ஆசிரியை] விலை ரூபா 24/-.
(21643)

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் திரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம் வறுமை நீங்கவும் அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும், பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர், ஸ்ரீ மாவை விநாயர் சோதிட நிலையம், 96, கோவில் வீதி, [ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி] நல்லூர்.
[21609]

### கணிதம் O/L

92, 93 பரீட்சைகளில் Credit பெறுபேறுடைய [ஒரே தடவையில்] அனுபவமுள்ள B.Sc. [Cey] ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி.
[21631]

### வெளிவந்துவிட்டது

91 August விசேடம் 92 விஞ்ஞான பாடங்களின் விடைகள் விற்பனையில், "A" Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
[சி-2750]

### வினா - விடைகள்

க. பொ. த. உயர்தர/சாதாரண மாணவர்களுக்கு வழி காட்டியாக கடந்த கால கணக்கியல், வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B.Com), றோயல் கல்லூரி ஆசிரியர். கிடைக்குமிடங்கள்; மண்டேலா றேடர், யாழ்ப்பாணம்; S.K சாமி அன்கோ, நெல்லியடி.
[21618]

## மணமகன் தேவை

இந்து, A/L, Short-Hand - Typing படித்த மற்றும் வீட்டு வேலைகளில் நன்கு பயிற்றப்பட்ட 30 வயது உடைய பெண்ணுக்கு மணமகன் தேவை. நட்சத்திரம் பூசம், இலக்கினம் தனுசு, 2இல் சனி, கேது, 4இல் செவ்வாய், 8இல் இராகு, அரசாங்க சேவை மற்றும் இதர சேவையில் உள்ளவர்கள், சுய தொழில் செய்பவர்கள், சைவ போசனம் விரும்பத்தக்கது. தகுந்த சீதனம் வழங்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 422, மே/பா, உதயன்.
[21658]

உ

# திருமண அழைப்பு

அன்புக்குரியீர்!

நிகழும் எழில் வருடமாம் ஆங்கிரச ஆண்டில் இனிய ஆனித் திங்கள் 25 ஆம் நாளில் [09 - 07 - 1992] வியாழக்கிழமை நண்பகல் 11-48 இலிருந்து 12-12 வரை மங்களம் மலிந்திடும் மாண்புறு சுப முகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவராஜா**
[சவூதி அரேபியா]

★ ★ ★ ★ ★

எமது புத்திரி
திருநிறை செல்வி
**குணவதி** (குணா)
(யாழ். மாவட்ட கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி)

இருவர் கரங்களும் சுற்றத்தார் வாழ்த்திட, உயர்ந்தோர் ஏத்திட நீர்வேலி காமாட்சி அம்பாள் தேவஸ்தான கலாசார மண்டப அரங்கினில் இறைவன் அருளால் இனிதே இணைய இருப்பதால், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் மென்மலர் தூவி மனதால் வாழ்த்த அன்புடன் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை விரும்பும்:

திருமதி இராமலிங்கமும்-
குடும்பத்தினரும்,
செல்லம் மில் ஒழுங்கை,
இமையாணன்,
உடுப்பிட்டி.

திருமதி குமாரசாமியும்-
குடும்பத்தினரும்,
காமாட்சி அம்பாள் கோவிலடி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

★ இரு வீட்டார் அழைப்பு ★
(தனிப்பட்ட அழைப்புக்கள் இல்லை)
[சி-2196]

# நினைவஞ்சலி

## 32ஆம் ஆண்டு 2ஆம் ஆண்டு





அமரர்
**நாகலிங்கம் திருஞானசம்பந்தர்**
(முன்னைநாள் ஆசிரியர், மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை)
தோற்றம்: 22-07 1913 மறைவு: 02-07-1960

திருமதி
**திருஞானசம்பந்தர் யோகாம்பிகை**
(இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்)
தோற்றம்: 23-08-1920 மறைவு: 01-07-1990

திதி: 07 - 07 - 1992

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை. [21654] — குடும்பத்தினர்.

"கர்த்தர் இம் மட்டும் உதவி செய்தார்"
(1 சாமு:7:12)

# 4 ஆவது ஆண்டு விழா

## எபனேஸர் ஜெப நிலையம்,

வட்டுக்கோட்டை.

எமது ஆலயத்தின் 4 ஆவது ஆண்டினை முன்னிட்டு, இன்று [07-07-92] காலை 9-00 மணிக்கு விசேஷ துதி ஆராதனையும், நிகழ்ச்சிகளும் இடம் பெறும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சபை போதகர்,
சபை உதவிப் போதகர்,
சக ஊழியர்கள்.
(5121)

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்

# விசேட பொதுக்கூட்டம்

சகல தனியார் கல்விநிறுவன இயக்குனர், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள், நிறுவனத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் ஆகியோருக்கான விசேட அறிவுறுத்தல் பற்றிய விடுதலைப்புலிகள் கல்விப் பிரிவினரின் விசேட பொதுக் கூட்டம் நிகழவுள்ளது. தனிப்பட்ட அழைப்புகள் அனுப்பப்படமாட்டா. இவ்வறிவித்தலை ஏற்று சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இடம்: சித்தன்கேணி கணேச வித்தியாசாலை
காலம்; புதன்கிழமை (08-07-1992) மாலை 4-00 மணி.

நன்றி:
[21656] - செயலாளர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கட்டைக்காட்டு மோதலில் வீரமரணமடைந்த

## வீரவேங்கை குருபரன்

சந்திரசேகரன்
[எழுதுமட்டுவாள்]

தாயின் மடியில்: 05 — 08 — 1971
தாயக மண்ணில்: 18 — 07 — 1991
திதி: 07 — 07 — 1992

அமைதியான பார்வையும்
அன்பான உன் பேச்சும்
பொன்போல உன் சிரிப்பும்
போனதுவோ எம்மைவிட்டு
பாசமாய் பழகிவிட்டு
பாதியிலே பிரிந்தாயே - விண்ணுக்கு
ஆறாது அழுகின்றோம் - மகனே!
ஓராண்டு சென்றாலும்,
உம்மை எங்களால் மறக்கமுடியவில்லை.

உன் பிரிவால் துயருறும்:
அம்மம்மா, மாமா,
அக்காமார், அத்தான்மார்,
அண்ணாமார், அண்ணிமார்,
மருமக்கள்,
திரு. சி. யோகராசா, திருமதி இ. பூரணம்.

நாகர் கோவில் வீதி,
எழுதுமட்டுவாள்.
[21663]

# ஓராண்டு நினைவஞ்சலி

இறைவன் படைத்தது! 07 — 09 — 1960



இறைவன் அழைத்தது! 07 — 07 — 1991

## திருமதி சிவரூபன் சரஸ்வதி

(சந்திரா)

அன்பின் உறவே! எம் நெஞ்சில் அணையா விளக்கே!
சந்திரா......
சொல்லால், செயலால் தூய்மையோடு வாழ்ந்திருந்து
எல்லையற்ற பாசத்தால்
எங்கள் நலம் காத்திருந்து செய்நன்றி மறவாது
ஈந்துவக்கும் பண்புடையவராய்
எமக்கெல்லாம் நல்கி எம்மையெல்லாம் ஆறாத்
துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்ததேன்
இன்றோடு ஓராண்டாகிப் போனாலும் மின்னல்
சிரிப்பும் மேனிப் பொலிவும்
மைவிழியும் விண்ணில் சென்று ஒழித்தாலும் எம்
நெஞ்சை விட்டுப்போமா.
.........கண்ணே எம் சந்திரா.........
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

கருத்தில் என்றும் நீ வாழ்வாய்
உன் நினைவால் நாளும் பொழுதும்
நினைந்துருகும்......

அன்புக் கணவன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.
கனகரட்ணம் வீதி,
வட்டுக்கோட்டை.
[21599]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## சிசிலைப் போல சிந்திப்பது எப்போது?

வெற்றிலைக்கேணிப் பகுதியில் போர்முனையில் உள்ள படையினருக்கு ருசியான உணவு தயாரித்து அனுப்புமாறு இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சிசில் வைத்தியரத்னா கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார்!

அவர் இவ்வாறு உத்தரவிட்டது குறித்துத் தவறாகக் கொள்வதற்கு எதுவுமில்லை. அதனைப் பெரிய விவகாரமாக்கி அலசி ஆராய வேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில் போர்முனையில் சமரில் ஈடுபட்டிருக்கும் படையினரின் நலன்களைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு ஓர் இராணுவத் தளபதிக்கு உண்டு.

மேலும் போரில் பல எண்ணிக்கையான படையினர் மடியும் போதும், காயமுறும் போதும், களத்தில் நிற்கும் சிப்பாய்கள் மனம் சோர்வுற்றுப் போகாமல் இருப்பதற்கு அவர்களுக்கு உற்சாக வார்த்தைகளைக் கூறித் தைரிய மூட்டுவது ஒரு படைத் தளபதியின் கடமையாகிறது. அந்த வகையில் லெப் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினா வழக்கத்துக்கு மாறான எதையும் செய்யவில்லை.

தமது படையினருக்கு யுத்த களத்தில் போதிய உணவு கிடைக்க வேண்டும் என்று அவர் விரும்பிய அல்லது நினைத்த அளவுக்கு வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களுக்குப் போதிய உணவு கிடைக்க வேண்டும் என்று அரசு சிந்திப்பதில்லை என்பதையே இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

தமிழ் மக்களுக்குத் தேவையான உணவு மற்றும் பாவனைப் பொருள்கள் கிடைக்காமல் செய்வது அரசின் பிரதான நோக்கங்களில் ஒன்று என்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. 1990 ஜூன் மாதத்தில் யுத்தம் தொடங்கியதிலிருந்தே தமிழ் மக்களின் வயிறுகளை வாட வைப்பதில் அரசு மிகவும் அக்கறையாக இருக்கிறது. வயிறு வாடினால் மனம் குழம்பும்; மனம் குழம்பினால் உரிமைப் போரைப் பலவீனப்படுத்தலாம்; அதன் மூலம் தமிழரைத் தோற்கடிக்கலாம் என அரசு மனப்பால் குடித்து வருகிறது.

அதனாலேயே அது கப்பல் மூலம் குறைந்தளவு பொருள்களை அனுப்பிவிட்டு, தரை மார்க்கமாகக் கொண்டு வருவதற்குத் தடை போட்டிருக்கிறது. இப்போது கூட வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதிகளில் போர் நடத்திக் கொண்டிருப்பதன் நோக்கம் என்ன?

யாழ்ப்பாணக் குடாநாட்டை பிரதான பகுதியுடன் இணைக்கும் வழிகளாக விளங்கும் கொம்படி, ஊரியான் பாதைகளை மூடிவிடுவதே ஆகும். அவ்வாறு மூடினால் கொழும்பிலிருந்து எந்தப் பொருளும் குடாநாட்டுக்குள் வரமுடியாது. கப்பலே கதி அல்லது பட்டினி என்ற நிலை உருவாகும் என்று அரசு நினைக்கிறது.

ஆனால் தமிழர்கள் கடந்த இரண்டு வருட அனுபவத்தில் இந்த வகையான எந்த வித நெருக்குதலையும் சமாளிக்கத் தயாராக இருக்கிறார்கள்; அதற்கான மனோவலிமையும் முயற்சியும் அவர்களிடம் உள்ளன.

வெற்றிலைக்கேணியில், புல்லாவெளியில், அலம்பிலில் படையினரை எதிர்த்துச் சமராடும் போராளிகள் எங்கள் பிள்ளைகள். இங்கு வாழும் பெற்றோர்கள் அன்போடும், பாசத்தோடும் வளர்த்த பிள்ளைகளே! அவர்களுக்கு நல்ல உணவு வழங்க வேண்டும் என்று பெற்றோர் என்ற நிலையில் நின்று நாம் சிந்திக்கிறோமா? சிந்திக் கூடாதா? செயற்படுவது எப்போது?

### உற்சவம்

கச்சாய் கண்ணகை அம்பாள் கோவில் அபிஷேக தினம் இன்று செவ்வாய்க் கிழமை நடைபெறும்.

விசேட அபிஷேகமும் கூட்டுப் பிரார்த்தனையும் அன்றைய தினம் இடம்பெறும்.

## ஜி. சீ. ஈ. உயர்தரம்:

# பரீட்சையை நடத்த முடியாவிடில் ஒத்திவைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

அடுத்த மாதம் முதல் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் கல்வியைப் பாதிக்கும் சகல நடவடிக்கைகளையும் நிறுத்துமாறு ஜனாதிபதியை கோருவது என்ற தீர்மானம் கடந்த ஞாயிறு நிறைவேற்றப்பட்டது.

பல்கலைக்கழக அனுமதி விடயத்தில் அநீதியான நடைமுறையை கையாள அரசு தீர்மானித்திருப்பதை எதிர்த்து எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலேயே முன்சொன்ன தீர்மானமும் எடுக்கப்பட்டது.

வடக்கில் திட்டமிட்டபடி ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையை அடுத்த மாதம் நடத்தாது விட்டால், 1989 இல் தென்பகுதி சூழ் நிலையை காரணங்காட்டி செய்யப்பட்டது போன்று அகில இலங்கை ரீதியாக அந்தப் பரீட்சையை பின்போடுமாறு கோருவது என்றும் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது; அது கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (உ-5)

## ரூபாவின் மதிப்பு குறையாது

ரூபாவின் மதிப்பு குறைக்கப்படமாட்டாது என்று நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு அறிவித்திருக்கிறது.

இலங்கை வந்திருந்த சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவற்றின் தூதுக்குழு புதிதாக எந்த வித நிபந்தனையையும் கொழும்பு அரசுக்கு விதிக்கவில்லை என்றும் நிதி அமைச்சு தெரிவித்திருக்கிறது. [இ-எ]

## பல்லேகல தடுப்பு முகாமில் 45 அடி நீளமான அகழி!

கண்டி பல்லேகலயில் உள்ள தடுப்பு முகாமில் 45 அடி நீளமான அகழி ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அகழியின் ஊடாகவே ஜே. வி. பி. கைதிகள் சிலர் அண்மையில் தப்பிச் சென்றதாகவும் அதனைத் தொடர்ந்தே இந்த அகழி கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த அகழி இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பயன்படுத்தப்பட்ட ஜேர்மன் அகழிகளை ஒத்ததாக இருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

## உபவேந்தர்கள் தெரிவில் தனிப்பட்ட விருப்பு-வெறுப்பு

### ருகுண பேராசிரியர் கண்டனம்

கொழும்பு, ஜூலை 7

பல்கலைக்கழக மான்ய ஆணைக் குழுவில் உள்ள உறுப்பினர்களின் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்கு இணங்கவே இன்று பல்கலைக் கழகங்களுக்கான உபவேந்தர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

ருகுண பல்கலைக்கழகத்தின் 1992 பட்டமளிப்பு விழா உரையை நிகழ்த்துகையில் பேராசிரியர் எம். பி. ஆரியபாலா முன்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழக உபவேந்தர் நியமனம் இன்று கல்விமான்கள் அமைப்பில் இருந்து முற்றாக நீக்கப்பட்டு விட்டது.

பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு சமர்ப்பிக்கும் மூன்று பேர்கள் அடங்கிய பட்டியலில் இருந்து ஒருவரை உபவேந்தராக ஜனாதிபதி நியமிக்கின்றார்.

பல்கலைக்கழக மான்ய ஆணைக்குழு உறுப்பினர்கள் விரும்பும் ஒருவரே இறுதியில் உபவேந்தராக நியமனம் பெறுகின்றார்.

சேர். ஐவர் ஜெனிங்ஸ் காலத்தில அரச தலையீடு ஏதுமின்றி சுதந்திரமான, சுயாட்சி அமைப்பாக பல்கலைக்கழகம் இயங்கி வந்தது. அதனால் தான் சர்வதேச ரீதியான பெருமையை எமது பல்கலைக்கழகம் பெற்றது.

1955 இல் ஐவர் ஜெனிங்ஸ் வெளியேறியதைத் தொடர்ந்து நிலைமை மாறியது. பல்கலைக்கழகம் தனது சுயாதிபத்தியத்தை படிப்படியாக இழந்தது. இறுதியில் அரசுக்கு அடிமையானதாக பல்கலைக்கழகம் மாறியுள்ளது.

இவ்வாறு பேராசிரியர் ஆரியபாலா தெரிவித்தார். [இ-எ]

## பல்கலைக் கழகத்துக்கு 9 ஆயிரம் பேர் தெரிவு

இம்முறை பல்கலைக்கழகத்துக்கு 9 ஆயிரம் பேர் அனுமதி பெற்றுள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் 180 முதல் 292 வரையிலான புள்ளிகள் என்ற அடிப்படையிலேயே அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இம்முறையும் கலைத்துறைக்கே அதிகம் பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2 ஆயிரத்து 720 பேர் கலைத்துறைக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை நடைபெறும்.

இது தொடர்பான மேலதிக விவரங்கள் எதுவும் அச்செய்தியில் தெரிவிக்கப்படவில்லை. [த]

## நூற்றுக்கணக்கான மீனவர் தொழில் இன்றிப் பாதிப்பு

காரைநகருக்கும், அராலித்துறைக்கும் இடைப்பட்ட கடல் பரப்பில் மீன் பிடித் தொழில் முழு அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தொழில் இழந்து கஷ்டப்படுகின்றன. காரைநகரில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பொன்னாலைக்கும் அராலித்துறைக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ரோந்து வருவதால் மீனவர்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-12]

## இடம்பெயர்ந்த காரைநகர் மாணவருக்கு தற்காலிக கொட்டகை

அராலி, ஜூலை 7

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து அராலி மேற்கு வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் வசதிக்காக போரூட் நிறுவன உதவியுடன் தற்காலிக கொட்டகை ஒன்றை பாடசாலை அபிவிருத்திச் சபை அமைத்து வருகிறது.

காரைநகரில் இருந்து இடம் பெயர்ந்து வந்த 230 மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர்.

இக் கொட்டகையின் அமைப்பு வேலைகளை அராலி மேற்கு இராஜன் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் சிரமதான அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர். (இ-12)

### காசோலை

யாழ்ப்பாணம், ஜூலை 7

நல்லூர் கோவில் வீதியைச் சேர்ந்த இரகுநாதன் கார்த்திகன் என்ற சிறுவன் தாம் கண்டெடுத்த இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளைக் காசோலை ஒன்றை உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர் தகுந்த அத்தாட்சியைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம். (அ)

### இன்று

குருநகர், ஜூலை 7

கொழும்புத்துறை, சென் ஜோசப்ஸ் வித்தியாலய தமிழ் தின விழா இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு அதிபர் திருமதி பி. எவ். சின்னத்துரை தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசாவும் கலந்து கொள்வார்கள்.

★ ★ ★

மாதர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் தையல், மனையியல், கைப்பணிப் பொருட்காட்சி இன்று செவ்வாய்க் கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை புத்தூர் குமரகுருபரன் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறும். (இ)

★ ★ ★

உடுவில், ஜூலை 7

சுன்னாகம் பிரதேச சபையிலும் அதன் உப அலுவலகங்களிலும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய் காலை 9.00 மணிக்கு சுன்னாகம் பொதுசன நூல்நிலையத்தில் நடைபெறும். [இ-152]

## இளம் வயதில் திருமணமானோரே பிரச்சினைகளை சந்திக்கின்றனர்

### கருத்தரங்கில் டாக்டர் சிவசங்கர்

வண்ணார்பண்ணை, ஜூலை 7

எமது நாட்டில் இளம் வயதில் திருமணம் செய்தவர்களே வாழ்வில் பிரச்சினைகளை அதிகம் எதிர்நோக்குகின்றனர். ஆனால் வெளி நாடுகளில் திருமணமாகாதவர்களே பிரச்சினைகளில் சிக்கி தற்கொலை முயற்சிகளிலும் ஈடுபடுகின்றனர். இழப்பு, பிரிவு, தனிமை, புறக்கணிப்பு, தீராதநோய், மற்றவர்களைத் தன் வசப்படுத்த முடியாமை போன்றவையே இதற்கு காரணிகளாக விளங்குகின்றன.

றெட்பானா நிறுவனத்தில் அண்மையில் இடம்பெற்ற "உளவியல் நெருக்கீடும் அதற்கான பராமரிப்பும்" என்ற தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில் பேசும்போது யாழ். மருத்துவ வளாக உளவியற் பிரிவு பதிவாளர் டாக்டர் திரு. சிவசங்கர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் தற்கொலைகள் சமீப காலங்களில் அதிகரித்து வருகின்றன. ஆளுமை குறைபாடு, சமுதாயம் கற்றுக்கொள்ளல், நெருக்கடிகளின் பரிணாமங்கள், தற்கொலைக்குரிய பொருள்கள் கிடைக்கும் தன்மை போன்றவை இதற்குரிய காரணங்களாகக் கருதப்படுகின்றன.

1991 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தற்கொலை செய்ய முயன்று தப்பியவர்களின் வாக்கு மூலங்களின்படி குடும்ப அங்கத்தவர்களிடையே ஏற்படும் உறவு விரிசல்கள், கணவன் மனைவியரிடையே எழும் மனக்கசப்புகள் பொருளாதாரத் தேவைகள் போன்றவை தற்கொலைக்கான காரணங்களாக கணிக்கப்படுகின்றன.

தற்கொலை செய்ய முயற்சிப்பவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். இவற்றிற்கான காரணங்களை ஆராய்ந்து நடவடிக்கையும் எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் சொன்னார்.

இது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி கருத்தரங்கின் இறுதியில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (த-162)

## வாழ்க்கையுடன் ஒட்டிய நிகழ்வுகளை வெளிப்படுத்தியுள்ளார் கவிஞர்!

### நூல் அரங்கேற்ற விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 7

சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் உணர்ச்சியும் சிந்தனையும் நிறைந்த கவிதைகள் இந்தக் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. வாழ்க்கையோடு ஒட்டிய நிகழ்வுகளையும் தனது அனுபவங்களையும் கவிஞர் இந் நூலில் வெளிப்படுத்தியுள்ளார்.

பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர் என். சண்முகலிங்கனின் "சந்தன மேடை" கவிதை நூல் அரங்கேற்ற வைபவத்தில் கலந்துகொண்டு ... நிகழ்த்திய கலாநிதி சுரேஷ் கனகராசா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், 'இது ஓர் அரசியல் கனோகமாக அன்றி உணர்ச்சி கலந்த எழுச்சி மிக்க கருவூலமாக அமைந்துள்ளது' — என்றார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தனது உரையில்,

"சமூகவியல் ... கலைத்துறையிலும் ... கவிஞனின் எழுத்துப்பணி எதிர்காலத்தில் எமது சமுதாயத்தின் விழிப்புணர்வுக்கு வித்திடக் கூடியதாக விளங்குகின்றது — என்றார்.

பேராசிரியர் சண்முகதாஸ், கவிஞர் திரு. இ. முருகையன், துணைவேந்தர் ஆ. துரைராஜா, பேராசிரியர் ஆறுமுகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நூலின் முதல் பிரதியை திரு. சண்முகலிங்கத்திடம் இருந்து பேராசிரியர் கே. பாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்.

### வர்த்தகர் கைது

மட்டக்களப்பு பகுதியில் பாதுகாப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்ட இளைஞர்களை பொலீஸ் உயர் அதிகாரி ஒருவரின் உதவியுடன் விடுதலை செய்வதாக கூறி அவர்களின் பெற்றோர்களிடம் பணம் பெற்று வந்த பிரபல வர்த்தகர் ஒருவர் மட்டக்களப்பு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். (த)

### செயல் அமர்வு

தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஆசிரியர் பயிற்சி பெறும் உதவி ஆசிரியர்களுக்கு இம் மாதம் 11ஆம் திகதி கற்கை வட்ட செயல் அமர்வும், 18ஆம், 19ஆம் திகதிகளில் இரண்டு நாள் செயல் அமர்வும் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். [த-11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலிலிருந்து பொருள்கள் இறக்க அனுமதி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 7

பருத்தித்துறைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள குமண கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலைகள் நேற்று நடைபெறவில்லை

ஊரடங்கு அமுலில் இருப்பதால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு வாகனங்கள் எதுவும் நேற்றுப் பருத்தித்துறைக்குச் செல்லவில்லை என்றும் —

பொருட்களை இறக்குவதற்கும் அவற்றை இங்கு எடுத்து வருவதற்குமான அனுமதியை பாதுகாப்பு அமைச்சிடம் செஞ்சிலுவைச் சங்க சர்வ தேசக் குழு கோரியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குமண கப்பலில் ஆயிரத்து 500 மெக்றிக் தொன் உரம், ஆயிரம் மெற்றிக் தொன் சீனி, 200 மெற்றிக் தொன் உப்பு, 10 மெற்றிக் தொன் ரின் மீன் ஆகியவையும் —

மற்றும் யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் திணைக்களத்துக்கும் தேவையான மருந்து வகைகளும், ஒட்சிசன் சிலிண்டர்கள் எரிபொருள்கள் ஆகியவையும், தபால் பொதிகளும் எடுத்து வரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## விமானச் சிதை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திருப்தி அடைய வேண்டியிருக்கும்!

— இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

[உ-10]

# கச்சாய் வீதியில் குண்டு வீச்சு!

தென்மராட்சி, ஜூலை 7

கடந்த சனிக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள வீடு ஒன்று பொம்மர் தாக்குதலுக்கு இலக்கானது.

குண்டு வீச்சினால் சாவகச்சேரி பிரதேச சபை தலைமை அலுவலகம் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ 117]

# சென்.ஜோன்ஸ் மைதானத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 7

"உதயன்" ஆதரவுடன் யாழ். றோட்டறக்ட் கழகம் நடத்தும்-ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — ஹொக்கிச் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டங்கள் மட்டும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இச்சுற்றுப் போட்டியின் ஏனைய ஆட்டங்கள் முன்னர் அறிவிக்கப்பட்டபடி யாழ். பல்கலைக் கழக மைதானத்திலேயே நடைபெறும்,

இன்று காலை 6.15 மணிக்கு ஆரம்பமாகும் முற்பகல் போட்டிகளில் இரண்டு ஆட்டங்களும் —

பிற்பகல் 3 00 மணிக்கு ஆரம்பமாகும் பிற்பகல் போட்டிகளில் மூன்று ஆட்டங்களும் இடம்பெறவிருக்கின்றன.

[உ]

# வெற்றிலைக்கேணியில் இராணுவ உயர் அதிகாரிகள்

கொழும்பு, ஜூலை 7

நேற்று பலாலிக்கு வந்த இராணுவ உயரதிகாரிகள் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வெற்றிலைக்கேணிப் பகுதிக்கும் சென்றதாக இலங்கை வானொலி அறிவித்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க, கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ ஆகியோரே வெற்றிலைக்கேணிக்குச் சென்றனர். அங்கு அவர்கள் பிரிகேடியர் விஜய விமலரத்னவையும் மற்றும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-10]

## திருமலை மாவட்டத்தில்

# இராணுவத்தினர் சுட்டதில் இருபது தமிழர்கள் காயம்

திருகோணமலை மாவட்டம் சீதனவெளி என்னுமிடத்தில் கடந்த சனியன்று இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 20 தமிழர்கள் காயமடைந்தனர்.

அன்றைய தினம் அப்பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற் கொண்ட படையினர் கண்டபடி பொதுமக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

அதில் இருபது பேர்வரை காயமடைந்தனர் என்றும்— தெரியவருகிறது:

காயமடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்வதைக் கூட படையினர் தடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## ஆரம்பக் கல்வி பயிலுநர் தெரிவு:

# பரீட்சை அனுமதி அட்டைகள் இன்னும் வந்து சேரவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 7

எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வி பயிலுநர் தெரிவுப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்றுவரை யாழ். கல்வி அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை.

பல பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றதைக் காணமுடிந்தது.

இதேவேளை—

பருத்தித்துறைக்கு வந்துள்ள 'குமண' கப்பலில் பரீட்சை ஆவணங்கள் அடங்கிய சில பொதிகள் யாழ். கல்வி அலுவலகத்துக்கு விலாசமிடப்பட்டு எடுத்துவரப்பட்டுள்ளன.

அவற்றில் மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகளும் இருக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதாக கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன:

[உ-5-162-111]

## புல்லாவெளிப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது

கட்டைக்காடு, ஆனையிறவு முகாம்களில் இருந்தும் மற்றும் போர் முனைகளில் இருந்தும் நாலாபுறமும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

சில ஷெல் குண்டுகள் மருதங்கேணியிலும் விழுந்து வெடித்தன. [உ-144]

## வடக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நிலையில் யுத்தத்துக்குத் தேவையான விமானங்கள், இராணுவத் தளபாடங்கள் போன்றவற்றை வாங்க வெளிநாட்டு நிதி உதவிகளும் கிடைக்கும் வாய்ப்புகள் இல்லை.

உதிரிப்பாகங்கள் இல்லாமையால் ஸ்ரீலங்கா விமானப் படையின் 16 விமானங்களும் (Aircrafts) மற்றும் பல ஹெலிக்கொப்டர்களும் செயலற்றுத் தரையில் தரித்து நிற்பதாகத் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் 'வை - 8' விமானத்தின் இழப்பு நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. — இப்படி அவர் குறிப்பிட்டுள்ளார். (உ-10)

## விமானத்தை இழந்த..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க, கூட்டுப்படைத் தளகர்த்தர் ஜெனரல் ஹமில்ட்டன் வனசிங்க ஆகியோரும் மற்றும் உயரதிகாரிகளும் பலாலிக்குச் சென்றனர்.

பலாலியில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரை வடபகுதி இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் அதிகாரிகளும் சந்தித்துப் பேசினர்.

அப்போது விமானம் வீழ்த்தப்பட்டதால் படையினருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-எ-10]

## விமானத்தை வீழ்த்தி..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ முன்னரும் இத்தாலித் தயாரிப்பான "சியாமா செட்டி" குண்டுவீச்சு விமானம் ஒன்றை இதேபோன்று ஸ்ரீலங்கா இராணுவம் இழந்திருக்கிறது.

இக்காரணங்களினால் விடுதலைப் புலிகளே இந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர் என்பதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

— இவ்வாறு அந்த அதிகாரிகள் சுட்டிக் காட்டியதாக அச்செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]


# 1991-ஏப்ரல் விசேட G.C.E. (A/L) பரீட்சை

மேற்படி பரீட்சையில், கணிதத்துறையில் 280 புள்ளிகளுக்கு மேல், உயிரியல் துறையில் 270 புள்ளிகளுக்கு மேல், முகாமைத்துவத்துறையில் 280 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவ மாணவிகளையும், அவர்களின் பெற்றோர்களையும் இன்று 92-07-07 [செவ்வாய்க் கிழமை] மாலை 4. 00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் காரியாலயத்திற்கு வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்,

24, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். — நடவடிக்கைக் குழு

[சி/2551]


# நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 05 - 1930

மறைவு: 28 - 05 - 1992

## அமரர் பொன்னுத்துரை வைத்திலிங்கம்

ஊர் போற்ற உற்றார் போற்ற வாழ்ந்த உன் பேற்றை எண்ணி இழப்பின் ஆற்றாமையை ஆற்றுகின்றோம் நாம்.

அன்னை. மனைவி, மகன், சகோதரங்கள், மருமக்கள், மாமா, மாமி, மச்சான்மார் மச்சாள்மார், சிற்றன்னை.

532. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

[சி/2904]

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 04 – 06 – 1909

மறைவு: 19 – 07 – 1991

## ஆழ்வார் செல்லையா

திதி: 07–07–1992

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய், பாசத்தின் இருப்பிடமாய், பண்பின் திருவுருவாய் வாழ்ந்து எமை அன்புடன் அரவணைத்து இன்புற வாழவைத்த எங்கள் தெய்வமே! தாங்கள் எமைப்பிரிந்து ஓராண்டு ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எம்மைத் தொடரும்.

தங்கள் ஆத்ம சாந்திக்காக நாகர் கோவில் நாக தம்பிரானை அனுதினமும் வேண்டி நிற்கும்.

குமுதெணி, அல்வாய் வடக்கு, அல்வாய். — குலவீரசிங்கம் குடும்பத்தினர் [மகன்]

[சி/2552]


# மன்னியுங்கள்!

## அறிவுக் களஞ்சியம்

அறிவுக் களஞ்சியம் முதலாவது இதழ் அச்சிட்ட பிரதிகள் யாவும் எம்மிடம் விற்பனையாகி விட்டன. மேலதிகப் பிரதிகள் தர முடியாமலிருப்பதற்கு மன்னியுங்கள். அறிவுக் களஞ்சியம் இரண்டாவது இதழ் 1-8-92 இல் வெளிவரும் மேலதிகமாகப் பிரதிகள் தேவையான விற்பனையாளர்கள் தயவுசெய்து உடனே தொடர்பு கொள்க.

அறிவுக் களஞ்சியம், [ஆனந்தா புத்தகசாலை] 226 காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். [சி/2907]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னத்தங்கம் செல்லப்பா

வேலணை கிழக்கு, அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது இல. 3, 2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சின்னத்தங்கம் செல்லப்பா 6-7-92 இல் காலமானார்.

இவர் மாரிமுத்து செல்லப்பாவின் அன்பு மனைவியும், திருமதிகள் சர்வேஸ்வரி, சுபத்திராதேவியின் அன்புத் தாயாரும், திரு. செ. சிவலிங்கம் [கோட்டக் கல்வி அலுவலகம், பண்டத்தரிப்பு] திரு. வி இராசகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், செல்வன் ஜசீதரன் [மாணவன், மகாஜனாக் கல்லூரி], செல்விகள் சுபாஜினி, சுதர்ஸினி [மாணவிகள், வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புப் பேத்தியாருமாவார்.

இவர் காலம் சென்றவர்களான முத்துத்தம்பி பொன்னம்மா, கந்தையா, செல்லையா, வல்லிபுரம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற விஸ்வலிங்கம், காலஞ்சென்ற வள்ளியம்மை, சரவணமுத்து, மனோன்மணி, பண்டிதர் மாணிக்கம் [அளவெட்டி] ஆகியோரது மைத்துனியுமாவார்.

இவரது இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை 7-7-92 இன்று பிற்பகல் 1 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: செ. சிவலிங்கம்.

இல. 3, 2 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

[21665]

## நாகலிங்கம் அமுதலிங்கம்

சுழிபுரம், நாகலிங்கம் அமுதலிங்கம் (ஓய்வு பெற்ற சிறாப்பர்—NATIONAL BANK–KANDY) அவர்கள் 5-7-92 அன்னாரது இல்லத்தில் (39/2, எட்மன்றன் வீதி, கிரிலப்பனை, கொழும்பு] காலமானார். அன்னார் பத்மசௌந்தரி அவர்களின் அன்புக் கணவரும், பத்மலிங்கம் (பொறியியலாளர்—லண்டன்), ஈஸ்வரலிங்கம் பொறியியலாளர்—நைஜீரியா), அமுதராணி, இந்திராணி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்திரா, சாந்தலட்சுமி, மகேந்திரராசா [படவரைஞர்—லிபியா] ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பையா [முன்னாள் கிராமசேவகர்—சங்கானை] அவர்களின் மைத்துனரும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளை, சேதுகாவலபிள்ளை (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர் — குடிவரவு குடி அகல்வுத் திணைக்களம்) அவர்களின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல் நா. சேதுகாவலபிள்ளை (சகோதரன்)

(சி/2905)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 228/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org